**சிபிஐ,அரசு மற்றும் சட்ட அதிகாரிகள்**
**-அருண் ஜேட்லி**
**பாஜக மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்**

நிலக்கரி சுரங்கங்கள் ஒதுக்கீடு ஊழல் தொடர்பாக உச்சநீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதற்காக இருந்த அறிக்கையில் அறிக்கையில் சட்ட அமைச்சரும், பிரதமர் அலுவலக அதிகாரிகளும் தலையிட்டது, மத்தியப் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகளில் மத்திய அரசின் தலையீடு இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு மேலும் வலுசேர்க்கிறது. கடந்த சில ஆண்டுகளில் சிபிஐயின் செயல்பாடுகளில் தலையிடும் விஷயத்தில், அரசுக்கு பதிலாக ஆளும்கட்சியின் பிரமுகர்கள்கூட ஆதிக்கம் செலுத்தும் நிலை படிப்படியாக உருவாகியுள்ளது.

டெல்லி சிறப்பு காவல்துறை (உருவாக்க) சிறப்புச் சட்டத்தின்(1946) இன்கீழ், மத்திய அரசின் புலனாய்வு அமைப்பாக சிபிஐ உருவாக்கப்பட்டது. மத்திய அரசு மற்றும் பிற அரசுத்துறை அதிகாரிகள் மீதான லஞ்ச ஊழல் வழக்குகளை விசாரிப்பதுதான் அதன் பிரதான பணி. நியமனம், இடமாற்றங்கள் மற்றும் பதவி மீதான எதிர்கால சபலங்களைத் தூண்டுவது ஆகியவற்றின் மூலம் சிபிஐ அமைப்பை சுயேச்சையாகவும், சுதந்திரமாகவும் இயங்கவிடாமல் அரசு எல்லாவகை முயற்சிகளையும் செய்துள்ளது.

ஊழலுக்கு எதிராக நாடுமுழுவதும் உருவான இயக்கத்தை அடுத்து, லோக்பால் அமைப்பு தொடர்பான கோரிக்கை எழுந்தது. அப்போது நானும் எனது சகாக்கள் திரு.ராஜீவ் ப்ரதாப் ரூடி மற்றும் பூபேந்திர யாதவ் ஆகியோரும் சேர்ந்து

மாநிலங்களவையின் தேர்வு கமிட்டியிடம் சிபிஐயின் சுயேச்சைத்தன்மை தொடர்பாக ஒரு குறிப்பு ஒன்றை அளித்தோம். அந்தக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

“அரசியல்வாதிகளின் எண்ணற்ற முறைகேடுகளால் மத்திய புலனாய்வு அமைப்பின் நம்பகத்தன்மை பறிபோயிருக்கும் அடிப்படையில் நாங்கள் சில அபிப்ராயங்களை வழங்க உத்தேசித்துள்ளோம். இந்திய அரசின் நாடாளுமன்ற விவகாரத் துறையின் கட்டுப்பாட்டிலிருக்கும் அந்த அமைப்பு, ஊழல் வழக்குகளை முன்னிட்டு லோக்பால் அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். மாற்று ஏற்பாடாக, மத்திய புலனாய்வுத் துறையின் சுயேச்சைத் தன்மையைப் பாதுகாக்கவும், அரசியல் தலையீடு இல்லாமல் இருக்கவும் கீழ்க்கண்ட ஆலோசனைகளை தந்துள்ளோம்:-

- சிபிஐயில் இரண்டு பிரிவுகள் இயங்கவேண்டும். அதன் இயக்குனர் மொத்த நடவடிக்கைகளுக்கும் தலைமை வகிக்க வேண்டும். அவருக்குக் கீழே குற்றவழக்கு விசாரணை இயக்ககம் என்ற பிரிவு தனியாக இயங்கவேண்டும்
- புலனாய்வு பிரிவும், குற்றவழக்கு விசாரணைப் பிரிவும் தனித்தனியாக சுயேச்சையான வகையில் இயங்குதல் அவசியம்.
- சிபிஐயின் இயக்குனர் மற்றும் குற்ற வழக்கு விசாரணை பிரிவு இயக்குனர் ஆகியோரை பிரதமர், நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் மற்றும் லோக்பாலின் தலைவர் ஆகியோர் அடங்கிய குழு நியமிக்க வேண்டும்.

- சிபிஐ இயக்குனர் மற்றும் சிபிஐ குற்றவழக்கு விசாரணைப் பிரிவின் இயக்குனர் இருவருக்கும் வரம்புக்குட்பட்ட பணிக்காலத்தை வரையறுத்தல் வேண்டும்.
- சிபிஐ இயக்குனர் மற்றும் சிபிஐ குற்றவழக்கு விசாரணை இயக்குனர் இருவருமே அவர்களது ஓய்வுக்காலத்துக்குப் பிறகு எந்த அரசுப் பதவிக்கும் பரிசீலிக்கப்படுதல் கூடாது.
- லோக்பால் தொடர்பான வழக்குகள் தொடர்பாக முடிவு செய்யும் அதிகாரத்தைப் பொருத்தவரை சிபிஐ, லோக்பால் அமைப்புக்கு மட்டுமே கட்டுப்படுவதாக இருத்தல் வேண்டும்.
- ஒரு வழக்கை புலனாய்வு செய்யும் நிலையில் ஒரு அதிகாரி இடமாற்றம் செய்யப்படுகிறார் எனில், அதற்கு லோக்பாலின் முன் அனுமதி தேவை.
- மத்தியப் புலனாய்வு துறைக்கு சார்பாகவும் ஆலோசனைக்கும் வரும் வழக்கறிஞர்கள் குழு அரசு சாராததாக இருத்தல் வேண்டும். லோக்பாலின் அனுமதிக்குப் பிறகு அவர்களை விசாரணை இயக்குனர் நியமிக்கலாம்..

ஆனாலும் நாங்கள் கொடுத்த ஆலோசனைகளை தேர்வுக் கமிட்டி நீர்க்கச் செய்தது. சில ஆலோசனைகளை மட்டுமே ஏற்றுக்கொண்டது.

"பல்வேறு தரப்புகளிலிருந்து வந்த ஆலோசனைகளைக் கணக்கில் கொண்டு, தேர்வுக் கமிட்டி கீழ்க்கண்டவற்றை பரிந்துரைக்கிறது-

i. சிபிஐ அமைப்பு தனக்கென இயக்குனரின் கீழ் குற்றவழக்கு விசாரணைக்கென தனிப்பிரிவை வைத்துக் கொள்ளலாம். சிபிஐயின் இயக்குனர் ஒட்டுமொத்த அமைப்புக்கும் தலைமைப் பொறுப்பை வகிப்பார்.

ii. சிபிஐயின் இயக்குனர், பிரதமர், நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதி அடங்கிய குழுவால் நியமிக்கப்படுவார்.

iii. மத்திய லஞ்ச ஒழிப்பு ஆணையத்தால் சிபிஐயின் குற்றவழக்கு விசாரணை இயக்குனர் நியமிக்கப்படுவார்.

iv. அரசு எடுக்கும் முடிவின் அடிப்படையில் குற்றவழக்கு விசாரணை இயக்குனர் மற்றும் சிபிஐ யின் இயக்குனரின் பணிக்கால வரம்பு நிர்ணயிக்கப்படலாம்.

v. லோக்பால் தொடர்பான வழக்குகளை நடத்தும், முடிவெடுக்கும் அதிகாரம் சிபிஐ அமைப்பைப் பொருத்தவரை லோக்பால் அமைப்புக்கு முழுமையாக கட்டுப்பட்டது.

vi. லோக்பால் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரிகளின் இடமாற்றத்திற்கு லோக்பாலின் முன் அனுமதி அவசியம்..

vii. லோக்பால் தொடர்பான வழக்குகளைப் பொருத்தவரை, லோக்பாலின் அனுமதியுடன் ஒரு வழக்கறிஞர் குழுவை சிபிஐ நியமிக்கலாம். அவர்கள் அரசு சாராதவர்களாக இருப்பது அவசியம்.

இந்த பரிந்துரைகளை அமைச்சரவையினர் மேலும் நீர்த்து, மூன்று பெரிய மாறுதல்களைச் செய்தனர். அவை

அ. தவறு செய்த அரசு அதிகாரி மீதான புகாரை லோக்பால் பரிசீலனை செய்வதற்கு லோக்பால் அமைப்பு அந்த குறிப்பிட்ட அரசு அதிகாரிக்கு ஒரு நோட்டீஸ் ஒன்றை அனுப்பவேண்டும்.

ஆ. லோக்பாலின் அனுமதியின்றி புலனாய்வு அதிகாரிகளை அரசு மாற்றிக்கொள்ளலாம்.

இ. சிபிஐ இயக்குனர்களாக இருந்தவர்கள் அரசில் நியமிக்கப்படலாம். இதன்மூலம் அந்த இயக்குனர்களை எதிர்கால பதவிக்கு ஆசைகாட்டி அவர்களை அரசு பயன்படுத்தலாம்.

லோக்பால் சட்டவரைவு தொடர்பாக அரசு தீவிரமான நிலைப்பாட்டிலேயே இல்லை. இரண்டு பாஜக உறுப்பினர்களோடு நான் சொன ஆலோசனைகள் அனைத்தும் முக்கியமானவை. அத்துடன் அந்த ஆலோசனைகள் மூலம் சிபிஐ என்னும் அமைப்பின் சுயேச்சைத் தன்மையையும், சுதந்திரத்தையும் பாதுகாக்க முடியும்.

நாங்கள் கொடுத்த பரிந்துரையில், சிபிஐயால் நியமிக்கப்படும் வழக்கறிஞர்கள் குழு அரசு சாராதவர்களாக இருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. லோக்பாலிடம், குற்றவழக்கு விசாரணை இயக்குனர் கலந்துபேசி அவர்களை நியமிக்க வேண்டும். அந்த நிலையில், அட்டர்னி ஜெனரலுக்கும், கூடுதல் சாலிசிட்டர் ஜெனரலுக்கும் அசிங்கமான சண்டை ஏற்படும் என்று கற்பனை செய்துகூட பார்க்கவில்லை. இருப்பினும், சட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள் வழியாகவே முக்கியமான வழக்குகளை அரசு தனது இஷ்டத்துக்கு நிர்வகிக்கிறது என்பது

எங்களுக்குத் தெரியும். சட்ட அதிகாரிகளின் அந்தஸ்தும் கௌரவமும் படிப்படியாக சீரழிந்து வருகிறது. சமரசத்துக்குள்ளாகி வருகிறது. அரசு அல்லது நீதிமன்றத்துக்கு அரசியல் சாசன அறிவுரையாளர்களாக இருக்கும் நிலையைத் தாண்டி, அவர்கள் அரசு சார்பான சட்ட-அரசியல் நிர்வாகக் கருவிகளாக கீழிறங்கிவிட்டனர். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் கீழ் நியமிக்கப்பட்ட பல்வேறு சட்ட அதிகாரிகள் தங்கள் பொறுப்பின் அந்தஸ்தை முழுமையாக தரம்குறைத்துள்ளனர். நேர்மையான அதிகாரிகளோ பதவியில் நீடிப்பதை விட, வெளியேறுவது மேல் என்ற நிலையில் பதவி விலகிவிட்டனர். சமீபத்திய சர்ச்சையில் சட்ட அதிகாரிகளின் சுயேச்சையான நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ள சீர்குலைவு நிலையும், சிபிஐயின் நிலையும் வெளிப்பட்டுள்ளன. அமைப்புகள் அனைத்தும் படிப்படியாக சீர்குலையும் காலத்தில் நாம் வாழ்ந்துவருகிறோம். அவற்றை சீர்செய்து, மறுகட்டுமான முயற்சிகளில் இறங்க வேண்டிய அவசியம் உள்ளது. சிபிஐ க்காக அரசு சாராத வழக்கறிஞர்கள் குழுதான் ஆலோசனை வழங்கவும், வாதிடவும் வேண்டும். அந்த வழக்கறிஞர்களை வழக்கு விசாரணை இயக்குனர் தான் லோக்பாலின் முன் அனுமதியுடன் நியமிக்க வேண்டும். பெரும்பாலான வழக்குகளில் அரசு மற்றும் பொதுத்துறை அதிகாரிகள் குற்றச்சாட்டுக்கு உள்ளாகும்போது, அரசே அதை விசாரிப்பவர்களை தேர்ந்தெடுக்க முடியாது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு சட்ட அதிகாரிகளின் அமைப்பையே இழிவுபடுத்தி விட்டது. இந்த நிலைதான் தற்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை சிக்கலுக்குள் தள்ளியுள்ளது. உச்சநீதிமன்றத்தின் கண்டனத்துக்குள்ளாகியுள்ள மத்திய அரசுக்கு இந்த கண்டனம் மிகவும் அவசியமானது. தவறு செய்தவர்கள் பதில்

சொல்லும் நிலை வரவேண்டும். அரசு தனது பொறுப்புணர்வைக் கண்டிப்பாக காட்டவேண்டிய தருணம் இது. அத்துடன் தேர்வுக் கமிட்டிக்கு லோக்பால் சட்டவரைவு தொடர்பாக நாங்கள் கொடுத்த ஆலோசனைகளையும் ஏற்கவேண்டிய நேரம் இது.

( 30 ஏப்ரல் 2013 இல் எழுதப்பட்டது.)